புதுடெல்லி சாணக்யபுரி தமிழ்நாடு இல்ல வளாகத்தில், நேற்று முன்தினம் (30.10.2025) அமைச்சர் எ.வ.வேலு புதியதாக கட்டப்பட்டு வரும் வைகை இல்ல கட்டுமானப் பணியின் முன்னேற்றம் குறித்து, ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, தமிழ்நாடு அரசின் புதுடில்லிக்கான சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தமிழ்நாடு இல்ல உள்ளுறை ஆணையாளர் ஆசிஷ்குமார், முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன், தலைமைப் பொறியாளர் எஸ்.மணிகண்டன் மற்றும் பொதுப்பணித்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

புதுடெல்லி தமிழ்நாடு இல்ல வளாகத்தில்

புதியதாக கட்டப்பட்டு வரும் வைகை இல்ல கட்டுமானப் பணி!

அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

புதுடெல்லி, நவ.1- புதுடெல்லி சாணக்யபுரி தமிழ்நாடு இல்ல வளாகத்தில், புதியதாக கட்டப்பட்டு வரும் வைகை இல்ல கட்டுமானப் பணியின் முன்னேற்றம் குறித்து, பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, புதுடெல்லி, சாணக்யபுரி, கவுடில்யமார்கில் அமைந்துள்ள வைகை தமிழ்நாடு இல்லத்தினை முழுவதுமாக இடித்துவிட்டு, நவீன வசதிகளுடன் புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் (30.10.2025), பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, தமிழ்நாடு அரசின் புதுடெல்லிக்கான சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தமிழ்நாடு இல்ல உள்ளுறை ஆணையாளர் ஆசிஷ் குமார், முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன், தலைமைப் பொறியாளர் (சென்னை மண்டலம்) எஸ்.மணிகண்டன் மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

மாநிலம் முழுவதும் உள்ள பயனாளிகளுக்கு

கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டைகள்!

2 மாத காலத்திற்கு நீட்டிப்பு! அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

சென்னை, நவ.1- முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில், மாற்றுத்திறனாளிகள், கண்பார்வை குறைபாடு உள்ளவர்கள், அறிவு சார் திறன் குறைபாடு உள்ளவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள் மற்றும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உள்ளிட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டைகளை இணையதளம் வாயிலாக (Online) பெற்றிடும் வகையில், 07.09.2023 முதல் முதற்கட்டமாக சென்னை

மாநகர் போக்குவரத்துக் கழக த்தில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

மாநிலம் முழுவதும் உள்ள பயனாளிகள் அனைவரும் கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை இணையதளம் வழியாக உடனுக்குடன் பெறுகின்ற வசதியினை அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் நடைமுறைப்படுத்த தேவையான மென்பொருள் உருவாக்கம் உள்ளிட்ட பணிகள், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNEGA) வழியாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறையுடன் இணைந்து இறுதி கட்டப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. இதனை முழுமையாக செயல்படுத்த, மாவட்ட அளவில் முகாம்கள் நடத்த வேண்டி உள்ளதால், ஏற்கனவே பயனாளிகள் பயன்படுத்தி வரும் 31/10/2025 வரை செல்லத்தக்க கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை, 31/12/2025 வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு நீட்டித்து பயணிகள் சிரமமின்றி பயணம் செய்யலாம் என போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற நிகழ்வில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் வழங்கப்பட்டு வரும் கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை பயனாளிகள் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து, பெற்றிட வழிவகை செய்யப்படும் என அறிவித்ததன் அடிப்படையில், இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு பயணியர் மற்றும் பொருள் போக்குவரத்துக் கழகம் (TNMLC) தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) நிறுவனத்துடன் இணைந்து, மாற்றுத்திறனாளிகள், கண்பார்வை குறைபாடு உள்ளவர்கள், அறிவுசார் திறன் குறைபாடு உள்ளவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள் மற்றும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உள்ளிட்ட பயனாளிகளுக்கு இணையதளம் வாயிலாக கட்டணமில்லா பயண அட்டைகளை பெறும் வசதி, முதற்கட்ட மாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் 07.09.2023 அன்று முதல் அமல்படுத்தப்பட்டது.

பயனாளிகள், இத்திட்டத்தின் வாயிலாக எவ்வித சிரமுமின்றி தங்களது இருப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள அரசு இசேவை மையம் அல்லது https://www.tnesevai.tn.gov.in/ என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 202526 ஆம் நிதி ஆண்டில் இணையதளம் வாயிலாக பேருந்து பயண அட்டையை புதுப்பிக்க ஏதுவாகவும், இவ்வசதியினை அனைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் (விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம், மதுரை மற்றும் திருநெல்வேலி) விரிவுபடுத்தி, புதியதாக பயண அட்டையை பயனாளிகளுக்கு வழங்கவும், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

இதனை செயல்படுத்த மாவட்ட அளவில் முகாம்கள் நடத்த வேண்டி உள்ளதால், ஏற்கனவே பயனாளிகள் பயன்படுத்தி வரும் 31/10/2025 வரை செல்லத்தக்க கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை, 31/12/2025 வரை மேலும் இரண்டு மாத காலத்திற்கு நீட்டித்து அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யும் வகையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சா.சி. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு, **ஈரோடு வடக்கு, திருப்பூர் கிழக்கு, திருப்பூர் தெற்கு** ஆகிய மாவட்ட தி.மு.க. மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் - க.நவமணி, 61/2, வாய்க்கால் தோட்டம், கள்ளிப்பட்டி, டி.என்.பாளையம், ஈரோடு மாவட்டம்.

துணைத் தலைவர் - க.ராஜேஸ்வரி, 254, பிள்ளையார் கோவில் வீதி., குட்டை மேட்டுப்புதூர், செண்பகபுதூர் அஞ்சல், சத்தி, ஈரோடு மாவட்டம்.

அமைப்பாளர் - ஜி.சுஜாதா, 2/206, மலையப்பாளையம், ஒழலக்கோவில், நம்பியூர், ஈரோடு மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஏ.சரண்யா, 9, வடக்கு தோட்டம், கொளப்பலூர், கோபி, ஈரோடு மாவட்டம்.

2) பி.பேபி, காளியப்பா வீதி, காசிபாளையம், கோபி, ஈரோடு மாவட்டம். 3) ஏ.ராணி, கிழக்கு வீதி, நேருநகர், அரியப்பம்பாளையம், சத்தி, ஈரோடு மாவட்டம். 4) வி.கௌரிஸ்வரி, நாதிபாளையம், குள்ளம்பாளையம், கோபி, ஈரோடு மாவட்டம். 5) வெ. சந்திரா 7/49, பொன்னம்பாளையம், நல்லூர், பவானி சாகர், ஈரோடு மாவட்டம். வலைத்தள பொறுப்பாளர் - ச.நந்தினி, 10/165, கிழக்கு வீதி, கேத்தம்பாளையம், சத்தி, ஈரோடு மாவட்டம்.

திருப்பூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் - எம். கண்ணகி 89, அம்மன்கோயில் வீதி, வெள்ளக்கோவில் - 638111, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - ஆர். சரோஜா 462, 1010 நெசவாளர் காலனி, முகாசி பிடாரியூர், சென்னிமலை - 638051, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - டி. சசிகலா 66/2, புதுமஜீத் தெரு, தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம். வேணுகா ஓலப்பாளையம், குருக்கப்பாளையம் அஞ்சல், கொடுவாய் வழி, திருப்பூர் மாவட்டம். 2) பா. சரஸ்வதி அமராவதி நகர், தாராபுரம் சாலை, திருப்பூர் மாவட்டம். 3) கா. சரோஜா தொப்பம்பட்டி, தொப்பம்பட்டி அஞ்சல், தாராபுரம் - 638657 4) ச. மேரி கிளாங்குண்டல் அஞ்சல், மூலனூர் வழி, தாராபுரம் தாலுக்கா - 639201, திருப்பூர் மாவட்டம். வலைதள பொறுப்பாளர் - ஏ. சாஜிதாபானு 5, சுல்தானியா தெரு, தாராபுரம் - 638656, திருப்பூர் மாவட்டம்.

திருப்பூர் தெற்கு மாவட்டம்

தலைவர் - பி. பானுமதி 2/133, ராஜீ நகர், உடுமலைப்பேட்டை சாலை, சின்னாம்பாளையம், பொள்ளாச்சி - 642003, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - வி. முத்துலட்சுமி 1/441, எஸ்.வி. புதூர், எஸ்.வி. மில்ஸ் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642128, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - எல். லதா 14/96, எப். கண்டியகவுண்டன்புதூர், எஸ்.வி. மில்ஸ் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642128, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். பாக்கியலட்சுமி 11/38, மார்கெட் குடியிருப்பு, திருமூர்த்தி நகர் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 638656, திருப்பூர் மாவட்டம். 2) எம். சித்ரா 1/33, விநாயகர் கோவில் தெரு, சீலக்காம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642205, திருப்பூர் மாவட்டம். 3) எஸ். மும்தாஜ் 83, நெல்லுகடை வீதி, உடுமலைப்பேட்டை - 642128, திருப்பூர் மாவட்டம். 4) வ. உமாராணி 1, கமிஷனர் சுப்பையா வீதி, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 5) ஜெ. பிரேமலதா ஜீவா வீதி, சங்கராமநல்லூர், மடத்துக்குளம் - 642204, திருப்பூர் மாவட்டம். வலைதளப் பொறுப்பாளர்கள் - 1) ந. விஜயலட்சுமி 11/47, கோபால் நகர், மாக்கினாம்பட்டி, பொள்ளாச்சி - 642003, திருப்பூர் மாவட்டம்.

2) எஸ். திவ்யா 3/191எ, அண்ணா நகர், கொங்கல் நகரம், புதூர், கொங்கல் நகரம் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642205, திருப்பூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்: 30-10-2025.

நாமக்கல் ப.இராணி
செயலாளர்,
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நேற்று (30.10.2025) சென்னை வர்த்தக மையத்தில் ஒன்றிய நுகர்வோர் பாதுகாப்பு, உணவு, பொது விநியோகத் திட்டம் மற்றும் புதிய, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷியைச் சந்தித்து தமிழ்நாட்டில் நெல் ஈரப்பதத்தை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்தி கொள்முதல் செய்திட அனுமதி மற்றும் செறிவூட்டப்பட்ட அரிசியைச் சோதனை செய்து, தரச் சான்றினை விரைந்து வழங்கிட ஆவன செய்திடவும் கோரிக்கை மனுவினை வழங்கினார். இந்நிகழ்வின் போது துறை முதன்மை செயலர் சத்ய பிரத சாகு, வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் முனைவர் ஆ. அண்ணாதுரை, துறை இயக்குநர் க. சிவராக, மற்றும் ஒன்றிய அரசின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருச்சி தெற்கு மாவட்டத்தில்

'என் வாக்குச் சாவடி - வெற்றி வாக்குச் சாவடி!'

அமைச்சர்கள் கே.என்.நேரு – அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்பு!

திருச்சி, நவ.1- திருச்சி தெற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" ஆலோசனைக் கூட்டம் திருச்சி "கலைஞர் அறிவாலயத்தில்" நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் பங்கேற்று வருகிற 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார்.

இதில் அமைச்சர் கே.என். நேரு ஆற்றிய உரை வருமாறு:-

வாக்குச்சாவடி வெற்றுச் சாவடி அல்ல என்னுடைய வாக்குச்சாவடியை வெற்றி சாவடியாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தை முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் நேற்று முன்தினம் மகாபலிபுரத்தில் அனைத்து பகுதி,ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களையும் அழைத்து வைத்து நாம் என்ன செய்ய வேண்டும் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

நம் டெல்டா மாவட்டத்தில் 41 கூட்டங்கள். அதில் முதல் கூட்டமாக திருச்சி தெற்கு மாவட்டம் ஆரம்பித்து வைத்திருக்கிறது. நாளை திருச்சியில் இருக்கின்ற மற்ற 6 தொகுதிகளின் கூட்டங்களும் முடிந்து விடும். மற்ற டெல்டா மாவட்ட கூட்டங்கள் இரண்டாம் தேதி அனைத்து கட்சியின் கூட்டத்திற்கு பின்பு சென்று கூட்டத்தை முடித்து விடுவோம். நவம்பர் 4 முதல் டிசம்பர் நான்கு வரை இந்தப் பணியை எப்படி செய்யப் போகின்றோம் ஏற்கனவே நீங்கள் செய்து வைத்தது..

ஒன்றிய அரசு எந்த ஆவணங்களை கொடுத்தாலும் அதை ஏற்றுக் கொள்கிறார்கள்

நமது கட்சியின் புதிய ஆதரவு வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்களா என்றும் தகுதியற்ற அனைத்து வாக்காளர்களும் நீக்கப்பட்டுள்ளார்களா என சரி பார்க்க வேண்டும் வீடு வீடாகச் சென்று இந்த பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டும்

திருச்சியில் நம்மை வெல்வதற்கு யாரும் இல்லை என்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும். கடந்த காலங்களில் தி.மு.க. எவ்வாறு இருந்தது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

டெல்டா மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளையும் வென்று கழகத் தலைவர் தமிழக முதல்வரை மீண்டும் 2026 இல் அரியணையில் ஏற்ற அயராது பாடுபட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு கேட்டுக் கொண்டார்.

இதில் கூட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உரையாற்றிய போது என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி முன்னெடுப்பிற்காக 40 நாட்கள் நாம் ஆற்றும் பணி என்பது, மீண்டும் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை முதலமைச்சர் ஆக்குவதற்கான பணியாக அமையும். எனவே அனைவரும் அர்ப்பணிப்போடு செயல்பட்டு, கடந்த தேர்தலில் திருச்சி மாவட்டத்தில் 9 தொகுதிகளையும் வென்றது போல, இந்த தேர்தலிலும் சாதனை படைத்திட, திருச்சி தெற்கு மாவட்டத்தில், 3 தொகுதிகளிலும் வெற்றியை உறுதி செய்வோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இக்கூட்டத்தில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், தொகுதி பார்வையாளர்கள் கதிரவன், மணிராஜ், அண்ணாமலை, மாவட்ட நிர்வாகிகள் வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, செந்தில்,

மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாநகர, நகர, பேரூர் வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜை நேற்று முன்தினம் (30.10.2025) சென்னை, நந்தனம் ஆவின் அலுவலகத்தில் தமிழ்நாடு பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் ஊழியர்கள் நலச்சங்கதின் நிர்வாகிகள் சந்தித்து தங்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றியதற்கு நன்றி தெரிவித்தனர். உடன் துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அ.ஜான் லூயிஸ், உட்பட பலர் உள்ளனர்.

ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியம் பொலவக்காளிபாளையம் ஊராட்சியில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் ஊர் பொதுமக்கள் மற்றும் அந்தியூர் உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் கோபி, வடக்கு ஒன்றிய கழக செயலாளர் மற்றும் கழக நிர்வாகிகள் பங்களிப்பில் பள்ளியின் கலையரங்கத்திற்கு முன்பாக மேற்கூரைகள் அமைத்து பேவர் பிளாக் சாலைகள் அமைத்திடும் பணியினை அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம் துவக்கி வைத்தார். நிகழ்வில் கோபி. ரவீந்திரன், கழக நிர்வாகிகள், ஆசிரியர், ஆசிரியைகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.